DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 29/2024

Miscellaneous :

Sessions : PW1

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | திலீப்குமார் |
|---|---|
| Father / Husband Name | பவர்லால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.**02.2025**

**குறுக்கு விசாரணை (சாட்சி மனுவின் பெயரில் திருப்பி அழைக்கப்பட்டு விசாரணை)**

1. நான் 2021 ம் வருடத்தில் இருந்து அச்சிறுபாக்கத்தில் கணபதி அய்யர் ஓட்டல் நடத்தி வருகிறேன். நான் எதிரிக்கு மலிகை சாமான்கள் தினமும் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தினமும் ரசீது மூலம் பணத்தை பெற்று கொடுப்பேனா என்றால் சில நாட்கள் அன்றைய தினமே கொடுப்பார். சில நேரம் வார கடைசியில் மொத்தமாகவும் கொடுப்பார். எதிரி அவர் கொடுக்க வேண்டிய பணத்தை நிலுவையில் வைத்து 10 நாளுக்கு ஒரு முறை கொடுப்பதும் உண்டு. காசோலை தொகைக்கு வேறு ஆவணங்கள் ஏதேனும் செக்கியூரிட்டியாக எதிரியிடம் இருந்து பெற்றேனா என்றால் காசோலையை தான் கொடுத்தார்.

2. வழக்கு காசோலையில் எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மொத்தம் 6 காசோலைகள் கொடுத்தார். அதில் மூன்று எதிரியுடையது. மூன்று எதிரியின் மனைவியுடையது. நான் காசோலை கொடுத்து திருப்பப்பட்டதால் 07.09.2022 அன்று எதிரி செல்ப் செக் போட்டு எனக்கு ரூபாய் 10 லட்சம் பஞ்சாப் நேஷ்னல் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதே நாளில் கேஸ் ஏஜன்சி மூலம் ரூபாய் 5 லட்சம் எனக்கு செலுத்திவிட்டார் என்றாலும் சரியல்ல. என்னிடம் மொத்தம் 7 நிரப்பாத காசோலைகள் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் அனைத்து பணத்தையும் பெற்றுவிட்டேன் என்றாலும் காசோலையை தாக்கல் செய்து மேலும் பணம் எதிரியிடமிருந்து பரிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் RTGS மூலம் ரூபாய் 10 லட்சம் எதிரிக்கு செலுத்தியதை காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் தாக்கல் செய்துள்ளேன். நான் நடத்திவரும் ஓட்டலில் நஷ்டம் ஏற்பட்டதால் அதனை ஈடு செய்வதற்காக எதிரியின் காசோலையை தகவறாக பயன்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.